LIBRA
13 OCT 2
Eastern University, S

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART II EXAMINATION IN BACHELOR OF COMMERCE 1998/99
## (MARCH - 2005) EXTERNAL DEGREE
## COM 305 CAPITAL MARKET AND FINANCIAL INSTITUTIONS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ. மூலதனச் சந்தையிலிருந்து பணச்சந்தையை வேறுபடுத்துக.

(08 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தையின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தப்படும் கருவிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ. "அலகுப் பொறுப்பாட்சி" என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியினரை அடையாளம் காண்க.

(08 புள்ளிகள்)

ஆ. "அலகு"களில் முதலீடு செய்வதன் அனுகூலங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

இ. இன்று இலங்கையில் செயற்பட்டுவரும் அனைத்து அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களையும் பெயரிட்டு, அவற்றில் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ. "திறைசேரி உண்டியல் சந்தை" என்றால் என்ன? இலங்கை திறைசேரி உண்டியல் சந்தையின் அண்மைக்காலச் செயற்பாடுகளைச் சுருக்கமாக மதிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ஆ. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் (Colombo Stock Exchange) செயற்பாடுகளைச் சுருக்கமாக மதிப்பீடு செய்க.

(06 புள்ளிகள்)

இ. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினை ஒழுங்குபடுத்தி முன்னேற்றுவதில் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஆற்றப்படும் சேவைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. அ. இலங்கையின் நிதிச்சந்தையின் வளர்ச்சிக்கு ஊழியர் சேமலாப நிதியமும் (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியமும் (ETF) எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது என விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. இலங்கையின் நிதிச்சந்தையில் காப்புறுதிக் கம்பனிகள் எவ்வாறு நிதி நடுவராகச் செயற்படுகின்றது என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

இ. இலங்கையின் நிதிச்சந்தையில் நிதிக் கம்பனிகள் எவ்வாறு முக்கிய பங்காற்றுகின்றன என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ. இலங்கை மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? அவற்றில் இரண்டைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. தற்போது இலங்கையிலுள்ள வணிக வங்கிகளால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. P மற்றும் Q என்னும் இரண்டு பிணையங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு :

| பொருளாதார நிலைமை | நிகழ்தகவு | சாத்திய வருவாய்கள் (%) P | சாத்திய வருவாய்கள் (%) Q |
|---|---|---|---|
| செழிப்பு | 0.3 | - 16 | 28 |
| சராசரி | 0.4 | 16 | 12 |
| மந்தம் | 0.3 | 20 | - 08 |

வேண்டப்படுவது :

அ. மேற்கூறிய ஒவ்வொரு பிணையத்தினதும் எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதத்தைக் (r) கணிக்க.

(04 புள்ளிகள்)

ஆ. ஒவ்வொரு பிணையத்தினதும் சாத்திய வருவாய்களின் நியம விலகலைக் ($\sigma$) கணிப்பதன் மூலம் அவை ஒவ்வொன்றிலும் முதலீடு செய்வதிலுள்ள இடரை அளவிட்டு அது பற்றி விமர்சிக்குக.

(04 புள்ளிகள்)

LIBRARY
13 OCT 2005

இ. இரு பிணையங்களிலும் சமமாக முதலீடு செய்வதன் மூலம் ஒரு பட்டியல் முதலீடு உருவாக்கப்படுமெனில் அப்பட்டியல் முதலீட்டின் எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதம் (rp) எவ்வளவாக இருக்கும்?

(04 புள்ளிகள்)

ஈ. இரு முதலீடுகளினது போக்கினையும் பட்டியல் முதலீட்டை உருவாக்குவதன் இடர்த்தன்மையினையும் அளவிடுவதற்கு இணைவுக் குணகத்தினைக் ($Cor_{PO}$) கணித்து அது பற்றி விமர்சிக்குக.

(04 புள்ளிகள்)

உ. பட்டியல் முதலீட்டு நியமவிலகலைக் ($\sigma p$) கணித்து பட்டியல் முதலீட்டின் இடர்த் தன்மையை விமர்சிக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

அ. "முறி"களின் பண்புகளை விளக்குக.

(02 புள்ளிகள்)

ஆ. அடிப்படை முறி பெறுமானமிடல் மாதிரியை விளக்குக.

(02 புள்ளிகள்)

இ. சந்தை வட்டி வீதங்களில் (கழிவு வீதம்) ஏற்படும் மாற்றங்கள் முறிகளின் பெறுமானத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

ஈ. கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட முறிகள் தொடர்பான பின்வரும் தரவுகள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

முறியொன்றின் முகப்பெறுமதி - ரூபா. 1,000/-
கூப்பன் வீதம் - 13%
முதிர்வுக் காலம் (மூல முதிர்வு) - 08 வருடங்கள்

வேண்டப்படுவது :

(i) சந்தை வட்டிவீதம் முறியின் கூப்பன் வீதத்திற்கு சமமாக இருக்கும் போது முறி வழங்கப்பட்ட திகதியில் அதன் பெறுமானம் யாது?

(04 புள்ளிகள்)

(ii) முறி வழங்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் சந்தை வட்டிவீதம் 15% ஆக உயர்வடைந்தது எனக் கருதின், அவ் வருடத்தில் முறியின் பெறுமதியைக் கணிப்பதுடன் கணிக்கப்படும் பெறுமதியிலே அம்முறி முறி வைத்திருப் போனால் வழங்கப்பட்டது எனக் கருதி நடைமுறை விளைவையும் மூலதன இலாப விளைவையும் கணிக்க.

(04 புள்ளிகள்)

(iii) முறி வழங்கப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் முறியொன்று ரூபா. 1,073.50க்கு வழங்கப்பட்டதெனக் கருதி முதிர்வு வரை விளைவினைக் (YTM) காண்பதுடன் நடைமுறை விளைவையும் மூலதன இலாப விளைவையும் கணிக்க.

**(04 புள்ளிகள்)**

(மொத்தம் **20** புள்ளிகள்)

அ. பின்வரும் பதங்கள் ஒவ்வொன்றையும் விளக்குக.

(i) கூப்பன் கொடுப்பனவு.

(ii) முதிர்வு வரை விளைவு (YTM).

(iii) பிறிமியம் முறி.

(iv) வட்டிவீத இடர்.

**(02 x 04 = 08** புள்ளிகள்)

ஆ. ஜம்போ கம்பனியின் பங்கொன்றின் நடைமுறை விலை ரூபா. 36 ஆகும். அதன் இறுதியாகச் செலுத்திய பங்கிலாபம் ரூபா. 2.40 ஆகும். கம்பனியின் உறுதியான நிதி நிலைமை மற்றும் அதன் குறைந்த இடர்த்தன்மை காரணமாக அதன் வேண்டப்படும் வருவாய் வீதம் 12% ஆகும். பங்கிலாபங்கள் எதிர் காலத்தில் ஒரு மாறா வீதத்தில் (g) வளர்ச்சியடையும் எனவும் வேண்டப்படும் வருவாய் வீதம் 12%மாகத் தொடர்ந்திருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுமெனில் தற்போதிருந்து இன்னும் ஐந்து வருடத்தில் ஜம்போ கம்பனியின் பங்கொன்றின் எதிர்பார்க்கப்படும் விலை எவ்வளவாக இருக்கும்?

**(06** புள்ளிகள்)

இ. ரோஜா கம்பனியானது விரைவாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் காலகட்டமொன்றை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. அதன் உழைப்புக்களும் பங்கிலாபங்களும் அடுத்த மூன்று ஆண்டு காலப்பகுதியினுள் 30% வேகத்திலும் அதன் பிறகு ஒரு மாறாத 10% வேகத்திலும் வளர்ச்சியடையுமென எதிர் பார்க்கப்படுகின்றது. ரோஜா கம்பனி இறுதியாகச் செலுத்திய பங்கிலாபம் பங்கொன்றுக்கு ரூபா. 18.20 ஆகும். பங்கு மீதான வேண்டப்படும் வருவாய் வீதம் 16% ஆகும்.

பங்கின் இன்றைய பெறுமதி ($P_0$)யைக் கணிக்க.

**(06** புள்ளிகள்)

(மொத்தம் **20** புள்ளிகள்)